சுகாதார வசதிகள்
அனைத்தும் ஒருங்கே
அமையப் பெற்ற
தலைசிறந்த
சைவ உணவகம்
*
மலாயன் கபே
யாழ்ப்பாணம்.
T'Phone: 22091

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

சுகாதார வசதிகள்
அனைத்தும் ஒருங்கே
அமையப் பெற்ற
தலைசிறந்த
சைவ உணவகம்
*
மலாயன் கபே
யாழ்ப்பாணம்.
T'Phone: 22091

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞ௸ மார்கழி ௴ 01 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 03 (16-12-1985) UTHAYAN –A LIVELY TAMIL DAILY கதிர்:- 20

# தமிழ் குழுக்களுக்கு விரைவில் அழைப்பு

## பிரதமர் ராஜீவ் சார்பில் பண்டாரி பேசுவார்

சென்னை, டிச. 15

**இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் இந்தியா விரைவில் தமிழர் குழுக்களுடன் பேச்சு நடத்தும் என இங்கு நம்பப்படுகிறது.**

பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் சார்பில் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி, போராளிகளை அழைத்துப் பேசுவார் எனவும் சொல்லப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்றுத் திட்டத்திற்கு இலங்கை அரசு இன்னும் பதிலளிக்கவில்லை.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் ஒரு தூது கோஷ்டி இந்தியா வரும் என்றும்–

அப்போது இலங்கையின் புதிய போக்குக் குறித்து இந்தியாவுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.

அதற்கு முன்னர் தமிழ்ப் போராளிகளின் இயக்கங்களைச் சந்தித்துப் பேச இந்தியா விரும்புகிறது.

தமிழர் கூட்டணி ஒரு மாற்றுத் திட்டதை சமர்ப்பித்து விட்டதால் இம்முறை அதற்கு அழைப்பு விடுக்கப்படமாட்டாதாம்.

இலங்கையில் ஆயுதப் படைகள் அத்துமீறல்களை நடத்தித் தமிழர்களைக் கொல்வதை நிறுத்தும்வரை இலங்கை அரசுடன் பேசுவதற்கு தாம் விரும்பவில்லை என்று போராளிகள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

இலங்கை அரசை நிர்ப்பந்தித்து ஆயுதப்படையின் அத்துமீறல்களை நிறுத்த ஏற்பாடு செய்தால், புதிய சூழ்நிலையில் போராளிகள் குழுக்களின் நிலை என்ன என்பதை அறியவே அவர்களுடன் பேச விருப்பம் கொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்ததாக இங்கு செய்தி கிடைத்துள்ளது.

வன்செயல்களை இரு சாராரும் நிறுத்தவேண்டியதன் அவசியமும் இச் சந்திப்பின் போது வலியுறுத்தப்படலாம் எனத் தெரிகிறது.

### தங்கம் சிக்கியது

கொழும்பு, டிச. 16

10 லட்சம் ரூபா பெறுமதியான 33 தங்க பிஸ்கெட்டுக்கள் கட்டுநாயக்கா–கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டன.

இந்தியாவுக்கு விமானம் மூலம் செல்ல இருந்த இந்தியப் பிரஜைகளான ஒரு தாய், தகப்பன், மகள் ஆகியோரின் சூட்கேஸ்களில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக சுங்கப் பகுதியினர் விசாரணை செய்து வருகின்றனர்.

### கண்காணிப்பு குழு தெஹிவத்த விஜயம்

திருகோணமலை, டிச 16

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஞாயிற்றுக்கிழமை மூதூர்த் தொகுதியில் உள்ள தெஹிவத்தக் கிராமத்திற்கு விஜயம் செய்தனர்.

தெஹிவத்த, ஒரு சிங்களக் கிராமம்.

அதன் பின்னர் குழு, திருகோணமலை நகருக்குத் திரும்பிவிட்டது.

## ஐ.தே.க. பிரமுகரின் சகோதரர் ஊர்காவல் படை வீரரால் சுடப்பட்டார்

திருகோணமலை, டிச.16

மூதூர் ஐ.தே.க பிரமுகர் ஒருவரின் சகோதரர் முஸ்லிம் ஊர்காவல் படை வீரர் ஒருவரால் சுடப்பட்டார்.

காயம் அடைந்தவரும் ஒரு முஸ்லிம் என்பது குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை மாலை இச்சம்பவம் நடந்தது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது: ஜனாப். வி. எம். ராஸிக், ஐ.தே.க. மூதூர் கிளையின் தலைவர்.

மூதூர் எம். பி. யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். இ. எச். மஹ்ரூபின் வலது கரமாக மூதூரில் இருப்பவர்.

அவரின் தம்பி ஒரு ஆசிரியர் வி.எம் லாபீர் என்பது அவரின் பெயர்.

ஊர்காவல் படைவீரர்களில் ஒருவரான முஸ்லிம் நபருக்கும் இவருக்கும் இடையே சில காலம் மனத்தாங்கல் இருந்து வந்ததாம்.

சனிக்கிழமை ஜனாப். லாபீர் தனது வீட்டு வாசலில் நிற்கையில் இந்த ஊர்காவல் படை வீரரால் சுடப்பட்டாராம்.

காலில் சூட்டுக் காயத்துடன் ஜனாப். லாபீர் மூதூர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுட்ட முஸ்லிம் ஊர்காவல் படை வீரர் அவருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியுடன் தலைமறைவாகிவிட்டார்.

பொலீஸார் அவரைத் தேடி வலைவிரித்துள்ளனர்.

**தினமும் ஓர் ஆஸ்பிரின் சாப்பிடுங்கள்!**

தினமும் ஓர் ஆஸ்பிரின் சாப்பிடுங்கள். இருதயம் சம்பந்தமான நோய் குறைந்து விடும்.

இப்படி அமெரிக்க சமஷ்டி சுகாதார அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆஸ்பிரின் சாப்பிடுவதன் மூலம் ஆண்டுதோறும் 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான இருதய நோயாளிகள் காப்பாற்றப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது.

மாரடைப்பு, இருதய நோவு இவற்றினால் கஷ்டப்படுபவர்களுக்குத்தான் இந்த ஆஸ்பிரின் சிகிச்சை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பிரின், வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையுடன் பாவிக்கப்பட வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

### சுபநேரம்

16 - 12 - 1985
திங்கட்கிழமை

சுபநேரம்:
12-22முதல் 1-52 வரை

ராகுகாலம்:
7-52 முதல் 09-22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஏறாவூர் பொலீஸ் கோஷ்டியினர் மீது கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு, டிச.16

ஏறாவூர் பொலீஸ் கோஷ்டி மீது கைக்குண்டு வீசப்பட்டது.

இதைத் தொடர்ந்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் மரணமானார்.

மரணம் அடைந்தவர் ஒரு போராளி என்று பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

தேவபுரத்தில் குண்டு வெடிப்பால் சேதமடைந்த அரசாங்க விடுதிகளைப் பார்வையிடச் சென்று இருந்த பொலீஸ் கோஷ்டி மீதே குண்டு வீசப்பட்டது.

குண்டு வெடிப்பினால் சேதமடைந்த கட்டடங்களை இனந்தெரியாத நபர்கள் பின்னர் தீக்கிரையாக்கி விட்டனர்.

# இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க பாக். ஜனாதிபதி தயார்

## 5 நாள் விஜயமுடிவில் பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல்

கொழும்பு, டிச.16

இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா–உல்–ஹக் விருப்பம் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு ஆயுதம் வழங்கக்கூடிய நிலையில் பாகிஸ்தான் இருந்தால், நிச்சயம் அந்த உதவியை இலங்கைக்கு நாம் செய்வோம்– என்று ஜனாதிபதி ஸியா விளக்கினார்.

இலங்கையில் 5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்ஹக் நேற்று மாலைதீவு பயணமானார்.

நேற்றுக்காலை அமைச்சரவை அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் பேசினார்.

இலங்கைக்கு எல்லாவித உதவிகளையும்செய்ய பாகிஸ்தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ஸியா–உல்–ஹக் கூறினார்.

அதனை அடுத்து செய்தியாளர் ஒருவர் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஆயுத உதவிகளும் செய்வீர்களா என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த ஸியா தெரிவித்ததாவது:

பாகிஸ்தான் ஆயுதம் உற்பத்தி செய்யும் நாடல்ல. அல்லது வெளிநாடுகளுக்கு ஆயுதம்விற்கும் கூட்டுத்தாபனமும் அல்ல.

பாகிஸ்தான் ஆயுதம் உற்பத்தி செய்யும் நிலையில் இருந்திருப்பின் இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்க நிச்சயம் ஆயுத உதவி செய்திருப்போம். அப்படிச் செய்யவில்லை எனில் நண்பர்களாக இருந்து என்ன பயன்? இன்று இலங்கையில் நடப்பது நாளை பாகிஸ்தானில் நடக்கலாம். நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும்.

அதனால் தான் இலங்கைக்கு எல்லாவிதத்திலும் உதவுவோம் என்று சொன்னேன்.

பொருளாதாரத்துறையில், அரசியல் துறையில் மற்றும் எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாடு எதுவுமில்லாமல் நாம் உதவுவோம். இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவித்தார்.

இன்னொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்கப் பாகிஸ்தான் உதவும் என அவர் சொன்னார்.

"நீங்களும் பயங்கரவாதத்தின் துணையால் தான் பதவிக்கு வந்தீர்கள் என்று கருதப்படுகின்றதே"– என்று கேட்கப்பட்டபோது, ஜனாதிபதி ஸியா பதிலளிக்கையில் சொன்னதாவது;

சிவில் யுத்தம் ஒன்று வெடிக்கும் நிலையில் பாகிஸ்தான் இருந்த பொழுது நான் பதவிக்கு வந்தேன். அதனால்தான் பாகிஸ்தானின் ஒருமைப்பாட்டைக் கூட பாதுகாக்க முடிந்தது. இதை பாகிஸ்தானின் உயர் நீதிமன்றம்கூட ஒரு தீர்ப்பில் ஏற்றுக்கொண்டுள்ளது– இப்படி ஸியா கூறினார்.

### மட்டக்களப்பு பெண் பொலீஸ் விடுதலை

மட்டக்களப்பு, டிச 16

6 மாதங்களாக பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பெண் பொலீஸ் கான்ஸ்டபிள் நேற்று விடுவிக்கப்பட்டார்.

இவரின் பெயர் செல்வி காத்தமுத்து ருக்மணி, வயது 28.

இவர் பூஸாவில் இருந்து நேற்று ரயில் மூலம் மட்டக்களப்பு வந்து சேர்ந்தார்.

முச்சந்தி முரளி



மெந்த நல்லது தான், வேலியே பயிரை மேயிற கதையாய் போச்சு உந்த ஊர்காக்கும் உலுத்தர் படையின்ரை வேலை...!

# தற்செயலாக வெடித்த குண்டு: இளைஞன் பலி

## யாழ்நகரில் திடீர் பதற்றம்

யாழ்ப்பாணம், டிச.16

தற்செயலாகக் குண்டு ஒன்று வெடித்ததனால் இளைஞர் ஒருவர், அந்த இடத்திலேயே மரணமானார்.

யாழ். பஸ் நிலையத்துக்கு அண்மையில் ஞாயிறு மாலை 6-25மணி அளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

முனீஸ்வரன் ஒழுங்கைக்குள் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கோட்டைக்குள் இருந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

இது கேட்ட மக்கள், ஆயுதப் படையினர் வீதிக்கு வந்துவிட்டார்கள் என்று நினைத்து அங்கும் இங்கும் சிதறி ஓடினர்கள். படையினர் வந்துவிட்டதாகக் கதையும் பரவியது.

நகரில் வாகன, சன நடமாட்டம் குறைந்தது, எனினும் சில நிமிட நேரத்தில் பதற்றம் நீங்கியது.

## இரு ஆசிரியர்கள் ஹபரணையில் கைது

### கோப்பாயைச் சேர்ந்தவர்கள்

திருகோணமலை, டிச.16

கொழும்பில் இருந்து திருகோணமலை வந்த இரண்டு ஆசிரியர்கள், ஹபரணையில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இரு ஆசிரியர்களும் கோப்பாயைச் சேர்ந்தவர்கள்.

இதுபற்றிய விபரம் வருமாறு:

மார்க்கண்டு சிவபாதசுந்தரம், இராஜரத்தினம் சச்சிதானந்தம் ஆகிய இருவரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள். கோப்பாய் வாசிகளும் கூட.

சனிக்கிழமை இரவு கொழும்பில் இருந்து உறவினர்களுடன் தனியார் பஸ் ஒன்றில் திருகோணமலைக்குப் பயணம் மேற்கொண்டு இருந்தனர்.

திருகோணமலை–கண்டி வீதியில் ஹபரணை என்னும் இடத்தில் வைத்து இந்த பஸ் ஆயுதப்படையினரால் சோதனையிடப்பட்டது. இருவரையும் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக ஆயுதப் படையினர் அழைத்துச் சென்றனர்.

அவர்களுடன் கூட வந்த பெண் உறவினர்கள் தொடர்ந்து திருமலைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் திருகோணமலை பிரஜைகள் குழுவைச் சந்தித்து தங்களுடன் கூட வந்த இரண்டு ஆசிரியர்களும் கைது செய்யப்பட்ட சம்பவம் பற்றி குழுவிடம் முறையிட்டனர்.

## நகைகளை திருப்பி ஒப்படைக்கும் முறை

### திட்டமிட்ட சதி என்கிறது சங்கம்

யாழ்ப்பாணம்,டிச.16

அடகு வைக்கப்பட்ட நகைகள் திருப்பி விநியோகிக்கப்படும் முறை, ஓர் திட்டமிட்ட சதி.

அடகு வைத்தோர்சங்கம் வாடிக்கையாளர்களை மேற்கண்டவாறு எச்சரித்துள்ளது.

மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை திருப்பிக் கொடுக்கும் முறை பற்றி அடகு வைத்தோர் சங்கம் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இப்பொழுது வாரந்தோறும் 60 நகைகளே பணம் செலுத்தியவர்களுக்கு திருப்பி வழங்கப்படுகின்றன.

இது அடகு வைத்து இன்னும் பணம் செலுத்தாது இருக்கும் வாடிக்கையாளர்களை பணத்தைச் செலுத்தத் தூண்டும் நடவடிக்கையாக இருக்கின்றது.

ஆகவே நகையை மீட்க என்று வாடிக்கையாளர்கள் புதிதாக பணத்தைச் செலுத்தவேண்டாம்.

நகைகளைத் திருப்பி வழங்கத் தொடங்கிய பின்னர் நகைகளை மீட்க புதிதாகப் பணம் செலுத்தியவர்களுக்கு எழும் பிரச்சினைகளுக்கு சங்கம் பொறுப்பாளி அல்ல.

மீட்புப் பணம் செலுத்தப்பட்ட நகைகள் 10,000 தற்சமயம் மக்கள் வங்கியில் உள்ளன.

வாரந்தோறும் 60 நகைகள் வீதம் வழங்கப்படும் திட்டத்தின்கீழ் இந்த நகைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க மக்கள் வங்கிக்கு மூன்றரை வருடங்கள் பிடிக்கும்.

மீட்புப் பணம் செலுத்தப்படாத நகைகள் 80,000வரையில் மக்கள் வங்கியிடம் உள்ளன.

வாரம் தோறும் 60 நகைகள் வீதம் இவற்றையும் திருப்பி வழங்க மக்கள் வங்கிக்கு 25 வருடங்கள் பிடிக்கும்.

ஆகவே தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திருப்பி வழங்கல் முறை மீட்புப்பணம் செலுத்தாது உள்ள 80,000 நகைகளின் உரிமையாளர்களை மீட்புப் பணம் செலுத்தத் தூண்டும் ஒரு திட்டமிட்ட சதி நடவடிக்கையே"–

இப்படி அடகு வைத்தோர் சங்கம், வாடிக்கையாளருக்கு எச்சரிக்கை விடுத்து உள்ளது.

**வித்தாரம்**

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி

### ஒரே ஒரு அம்புலன்ஸும் பழுது

நல்லூர், டிச. 16

யாழ். பெரியாஸ்பத்திரியின் உபயோகத்தில் இருந்த ஒரே ஒரு அம்புலன்ஸும் நேற்று பழுதடைந்துவிட்டது.

அவசர நோயாளிகளை ஏற்றி இறக்கவும்–

வைத்திய நிபுணர்களை, எக்ஸ்றே நிபுணர்களை மற்றும் வைத்திய தாதிகளை ஏற்றிஇறக்கவும் இது தினமும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

பழுதடைந்த அம்புலன்ஸை திருத்துவதற்கான உபகரணங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாதபடியால் கொழும்பில் இருந்தே அவற்றை வரவழைக்கவேண்டி உள்ளதாம்!

யாழ். வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் அவசரமாக தேவைப்படுவதால் தற்காலிகமாகவாவது தெல்லிப்பழை, மந்திகை வைத்தியசாலைகளில் இருந்து அம்புலன்ஸ் பெற்றுக்கொள்ள உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

### முன்னாள்பிரதமர் காலமானார்

போர்ட்றே, டிச. 15

மொரீசியஸின் கவர்னர் ஜெனரலும், முன்னாள் பிரதமருமான ராம்குலாம் 85ஆவது வயதில் இன்று காலமானார்.

1968ஆம் ஆண்டு மொரீசியஸ் சுதந்திரம் அடைந்தபோது அதன் முதலாவது பிரதமராக இவர் பதவி ஏற்றிருந்தார்.

1976 முதல் 77 வரை இவர் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார்.

### அடகு வைத்தோர் போராட்டம்

#### மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 16

அடகு வைத்தோர் சங்கம் மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக இன்று முதல் நடத்தவிருந்த மறியல் போராட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இப் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க கண்காணிப்புக் குழு அவகாசம் கேட்டுள்ளதாலும்–

கண்காணிப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் கா.சிவத்தம்பி பாதுகாப்பு அமைச்சுடனும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுடனும் தொடர்பு கொண்டு இருப்பதனாலும் மறியல் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வெற்றி நாயகி சரிதாவின் பேசும் காந்த விழிகள்

தமிழ்த் திரையுலகின் வெற்றிநாயகிகள் வரிசையில் சரிதா முக்கிய இடத்தைப் பிடித்து வைத்துள்ளார். பத்மினி, சாவித்திரி, கே. ஆர். விஜயா போன்றவர்களின் நடிப்பில் ஒரு தனித் தன்மை தெரியும். அதே தனித் தன்மை சரிதாவின் நடிப்பிலும் காணலாம்.

சரிதாவின் அகுறன் விழிகளில் அனல் தெறிக்கும்—காதல் பெருகும்—பசுமையின் செழிப்புத் தெரியும். ஆயிரம், ஆயிரம் அர்த்தங்களைப் பிரதிபலிக்கும் அந்த விழிகள் சரிதாவிற்குச் சொந்தம்.

படத்தில் ஒரு கதாபாத்திரத்தில் சரிதா நடிக்கிறார் என்றால், அந்தப் படம் ஒரு வேளை வெற்றி அடையாவிட்டாலும் அவரைப் பொறுத்தவரை வெற்றி பெற்றுவிடுவார்.

சில நடிப்புகளைத் தன் பருத்த உடம்பினால் வெளிப்படுத்த முடியாவிட்டாலும், முகபாவங்களினால் பிரதிபலித்து விடுவார்.

படவுலகிற்கு சரிதா கிடைத்த பிறகு குறிப்பிடத்தக்க கதாபாத்திரங்கள் பெருமை பெற்றன. தமிழ்ப்படவுலகிற்கு "சிறந்த குணசித்திர நடிகை கிடைத்து விட்டார்." என்று ரசிகர்கள் பெருமிதம் கொண்டார்கள்.

இவரின் நடிப்புத் திறமையைக் கண்டறிந்து திரையில் மின்னவைத்த பெருமை வெற்றி இயக்குனர் கே. பாலசந்தரையே சாரும். எந்த இயக்குநரும் தமது படங்களில் சரிதாவைப் பயன்படுத்தினாலும் பாலசந்தர் அவரது நடிப்பாற்றலை வெளிப்படுத்துவது போல் மற்றவர்கள் வெளிப்படுத்துவதில்லை.

இதன் காரணமாகவே சரிதா பாலசந்தரின் படங்கள் மூலம் பல

### தினசரி சினிமா

வெற்றிவாய்ப்புகளை பெற்றுள்ளார். ஏன் சரித்திரம் படைத்துள்ளார் என்றே சொல்லலாம்.

பண வசூலில் சில படங்கள் பெரிய அளவில் வெற்றிபெறவில்லை என்றாலும், இவரது நடிப்பைப்பற்றி எவரும் குறை கூறியதில்லை. எந்தப் படமாக இருந்தாலும் தனித் தன்மையை இடப் பார்த்து நிலை நிறுத்தி விடும் ஆற்றல் இவருக்கு உண்டு.

சரிதாவின் விழிகள் பேசுமொழி, சினிமா உலகில் புதிய விழிப்புணர்ச்சியையே ஏற்படுத்திவிட்டது.

## பெப்ரவரியில் பொதுத் தேர்தல்

# நான் தோற்ருல் இரத்தக்களரி

## பிலிப்பீன்ஸ் ஜனதிபதி மார்க்கோஸ் எச்சரிக்கை

மணிலா, டிச 15

"ஜனதிபதி தேர்தலில் நான் தோல்வி அடைந்தால் பத்து ஆண்டுகளுக்கு பிலிப்பீன்ஸில் இரத்தக்களரியும் ஸ்திரமின்மையும் நிலவும்".

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி திரு. பெர்டினன்ட் மார்கோஸ் மேற்கண்ட எச்சரிக்கையை கடந்த ஞாயிறு வெளியிட்டார்.

தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பிக்குமுகமாக ஜனதிபதி மார்கோஸ் ஞாயிறு தேசிய டெலிவிஷனில் தோன்றி உரை நிகழ்த்தினர்.

அப்பொழுது தான் இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தார்.

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி, உப ஜனதிபதி தேர்தல்கள் 1986 பெப்ருவரியில் நடைபெற இருக்கின்றன.

ஜனதிபதி திரு. பெர்டினன்ட் மார்க்கோஸை எதிர்த்து கொலை செய்யப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் திரு அக்குவைனேவின் மனைவி திருமதி கொரசோன எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

திருமதி கொரசோன தெரிவு செய்யப்பட்டால், பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ ஆதிக்கம் ஏற்படும். நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை நிலவும். இரத்தக்களரி உருவாகும். பத்து ஆண்டுகளுக்கு இது இருக்கும் — இப்படி ஜனதிபதி மார்கோஸ் குறிப்பிட்டார்.

### கானு பிரஜைகள் அமெரிக்காவில் கைது

நியூஜெர்ஸி, டிச. 15

ஏவாயுதங்கள், மற்றும் நவீன ஆயுதங்கள் வாங்க முயன்ற மூன்று கானு நாட்டுப் பிரஜைகளை அமெரிக்க அதிகாரிகள் கைது செய்தனர்.

கானுவில் உள்ள எதிர்க்கட்சி ஒன்றுக்காகவே இவர்கள் ஆயுதங்களை வாங்கிக் கடத்த முயற்சித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பஞ்சாப்பில் ஆயுதம் கொண்டு செல்ல தடை

சண்டிகார், டிச. 15

பஞ்சாப்பின் தலைநகரில் துப்பாக்கி மற்றும் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு செல்வது ஜனவரி 9ஆம் திகதி வரை தடை செய்யப்பட்டுள்ளது.

வட பஞ்சாப் மாநிலத்தில் அங்கும் இங்கும் இடம்பெற்றுவரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

## இதுவரை 20,000 பேருக்கு எய்ட்ஸ் நோய்

### அரைவாசிப் பேர் மரணம்

ஜெனீவா, டிச. 15

உலகில் 72 நாடுகளைச் சேர்ந்த 20,000 பேர் வரை எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இத் தொகையில் அரைவாசிப்பேர் இறந்துவிட்டனர். இந்த நோயை உடனே மாற்றக்கூடிய மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

உலக சுகாதார ஸ்தாபன இயக்குநர் டாக்டர் பக்ரி ஆஸாத் இத் தகவல்களை வெளியிட்டார்.

எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பது பற்றி ஆராய உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் மாநாடு அடுத்த வாரம் ஆரம்பமாக உள்ளது.

இதுவரை எய்ட்ஸ் நோய் பரவியிருப்பதாக கம்யூனிஸ்ட் நாடுகள் எதுவும் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் முறையிடவில்லை.

ஐரோப்பாவில் ஒரு இலட்சம் பேரும் அமெரிக்காவில் பத்து இலட்சம் பேரும் எய்ட்ஸ் நோய்க்கிருமிகளை பரப்பக்கூடியவர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தில் 166 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அந்த நாடுகளில் எய்ட்ஸ் நோயை எதிர்த்துப் போராடும் ஆண்டாக 1986-ஐ பிரகடனப்படுத்துவதே உலக ஸ்தாபனத்தின் நோக்கமாகும்.

### கூடுதல் இராணுவ உதவி

வாஷிங்டன், டிச.15

நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு கூடுதல் இராணுவ உதவிகள் வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் றேகன் அறிவித்துள்ளார்.

நிக்கரகுவா அரசுத் தலைவர்களுக்கு விடுத்த எச்சரிக்கை ஒன்றில் அதிபர் றேகன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

### ஷூல்ட்ஸ் சீறுகிறர்

பொன், டிச. 15

கிழக்கு ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்த ரஷ்யாவை அனுமதிக்க முடியாது.

இப்படி அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷூல்ட்ஸ் எச்சரிக்கை விடுத்தார்.

மேற்கு ஜேர்மனிக்கு விஜயம் செய்தபோது தான் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## வெளி உலகில்

### நாகேஸ்வரராவ் குணமடைந்து வீடு திரும்பினர்

சென்னை, டிச. 15

62 வயதான திரைப்பட நடிகர் ஏ. நாகேஸ்வரராவ் குணமடைந்து வீடு சென்றார்.

இவர் ஒரு வாரகாலம், சென்னை அப்போலோ ஆஸ்பத்திரியில் இருதய நோய்க்காகச் சிகிச்சை பெற்று வந்தார்.

26 தமிழ் படங்கள் உட்பட, 220 படங்களுக்கு மேல் நடித்து உள்ள நாகேஸ்வரராவ் தொடர்ந்தும் படங்களில் நடிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

"இறப்புத்தான் எனக்கு ஓய்வு. அதுவரை படங்களில் நடிப்பேன்" என்று அவர் சொன்னர்.

### ஆர்ஜன்டீனுவில் அன்னையர் முன்னணி ஆர்ப்பாட்டம்

புவனஸ்அயர்ஸ், டிச15

மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றில் குற்றஞ் சாட்டப்பட்ட ஆர்ஜென்டீனுவின் முன்னுள் இராணுவத் தலைவர்கள் விடுவிக்கப்பட்டதைஎதிர்த்து அன்னையர் முன்னணி தலைநகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது.

ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும் இந்த 24மணி நேர ஊர்வலத்தில் 4,000 பேர் வரை கலந்து கொண்டனர்.

இராணுவ ஆட்சியில் காணுமல போனவர்களின் உறவினர்கள் இந்த ஊர்வலத்திற்குத் தலைமை வகித்தனர்.

கடந்த ஆண்டில் மட்டும் 9,000 பேருக்கு அதிகமாகக் காணுமல் போய் விட்டார்கள்.

ஆயிரக்கணக்காேனரை சித்திரவதை செய்து கொலை செய்தது என்ற வழக்கில் முன்னுள் ஜனதிபதி ஒருவருக்கும் அவரது உதவியாளருக்கும் மட்டுமே ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

4 இராணுவத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

"கிரிமினல்களை விடுவித்து விட்டார்கள்"— என்று ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஒழுங்கு செய்த அன்னையர் முன்னணித் தலைவி ஹெபி டி பொனபின் சொன்னர்.

இவரின் இரண்டு பிள்ளைகள் கடந்த ஆண்டு காணமற் போய் விட்டனர்.

1977இல் இருந்து அன்னையர் முன்னணியின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

## நெல் விளைச்சல் சாதனை

புதுக்கோட்டை, டிச. 15

ஒரு ஹெக்டர் நிலத்தில் 8,155 கிலோகிரும் நெல்விளைச்சல்!

தமிழ் நாட்டில் அறந்தாங்கி தாலுகாவில் சுப்பிரமணியபுரம் கிராமத்தில் இச்சாதனை நிகழ்த்தப் பட்டது.

விஜயபுரம் வாசியான டாக்டர் இராமையாவே இச்சாதனையை ஏற்படுத்தினர்.

## நீதிபதி மீது எதிரி செருப்பு வீச்சு

டாக்கா டிச.15

நீதிபதி மீது செருப்பை வீசிய எதிரி ஒருவரை சட்டத்தரணிகள் செம்மையாகத் தாக்கினர்.

பலத்தகாயம் அடைந்த எதிரியை சிறைக்காவலர்கள் சிறைக்குப் பதிலாக, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனர்கள்.

பங்களாதேஷிலுள்ள நீதிமன்றம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது. இது பற்றிய விவரம் வருமாறு:-

கொலை வழக்கு ஒன்றில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மதிபூர் ரஹ்மானுக்கும் அவனின் மூன்றுகூட்டாளிகளுக்கும் நீதிபதி ஆயுள் தண்டனை விதித்தார்.

தீர்ப்புக் கூறியது தான் தாமதம். எதிரியான ரஹ்மான் காலில் இருந்த செருப்பைக் கழற்றி நீதிபதியை நோக்கி வீசினர்.

அவ்வளவுதான், அங்கு இருந்த சட்டத்தரணிகள் எதிரி மீது பாய்ந்து தாக்கத் தொடங்கி விட்டார்கள்.

நீதிமன்ற காவலர்களும் சேர்ந்து எதிரியைத் தாக்கினர். இதனை நூறு வெளியார்கள் பார்த்துக் கொண்டு நின்றனர்.

எதிரியை சிறைக்குக் கொண்டு செல்வதற்குப் பதிலாககாவலர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு விரைந்தனர்.

சம்பந்தப்பட்ட நீதிபதியின் பெயரை பொலிஸார் வெளியிடவில்லை.

## சுன்னுகம் மின் உபகரண தொழிற்சாலையில் மூன்ருவது முறையாகவும் கொள்ளை

சுன்னுகம், டிச.16

சுன்னுகத்திலுள்ள மின்சார உபகரண உற்பத்தித் தொழிற்சாலையில் ஒரே இரவில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப் பட்டன.

ஒரே தொழிற்சாலையில் மூன்ருவது தடவையாக நடந்துள்ள இக்கொள்ளையால் சுமார் 80 பேர் தொழிலிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஏரோ இலக்ரிக்கல்ஸ் இண்டஸ்றீஸ் ஸ்தாபனத்திலேயே கொள்ளை இடம் பெற்றது.

இனந்தெரியாத நபர்கள் நவீன லெட் ஹோல்டர்கள், துளையிடும் கருவிகள், மின் உபகரண வயர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

இதே தொழிற்சாலையில் இதற்குமுன்பும் இரு தடவை சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை இளைஞர் குழுக்கத்திற் சென்றது குறிப்பிடத்தக்கது.

மின்சார உற்பத்திப் பொருள்களும் களவாடப்பட்டதால் யாழ்ப்பாணத்தில் தரமான மின்சாரப் பொருள்களை உற்பத்தி செய்த இந்த ஸ்தாபனத்தை மூடுவதே எமக்குள்ள ஒரே வழியாகத் தோன்றுகிறது என ஸ்தாபன உயர் அதிகாரி உதயனிடம் தெரிவித்தார்.

களவாடப்பட்ட பொருள்களை திருப்பி ஒப்படைக்குமாறு நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### படையினர் தேடிய நபர் வீட்டில் இருக்கவில்லை

யாழ்ப்பாணம், டிச. 16

வவுனியாவில் இறம்பைக்குளத்தில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு ஆயுதப் படையினர் ஒரு வீட்டைச் சோதனை இட்டனர்.

வீட்டில் குடியிருந்தவர்கள் விசாரணை செய்யப்பட்டனர். படையினர் தேடிச்சென்ற நபர் அங்கு இருக்கவில்லை.

வீடு, தேவாலயத்துக்கு அருகில் உள்ளது.

### ஆங்கிலபாட கைநூல் காலதாமதம்

காங்கேசன்துறை, டிச16

பாடசாலைகளில் 7ஆம் ஆண்டில் கற்கும் மாணவர்களுக்கான ஆங்கில பாட கைநூல் தாமதமாகவே வந்து சேர்ந்தமையால் அடுத்தாண்டு முதலாம் தவணையில் 8ஆம் ஆண்டில் அதனைப் போதிக்க வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

7 ஆம் ஆண்டு மாணவர்களுக்கென கடந்த ஆண்டு கல்வியமைச்சு அறிமுகம் செய்திருந்த ஆங்கில பாட கைநூல் யாழ். மாவட்ட பாடசாலைக்கு தவணைகள் முடியும் நேரத்திலேயே வந்து சேர்ந்தது. அது அண்மையில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கல்வி வட்டாரங்களுக்கும் அனுப்பப்பட்டது.

தவணைகள் முடியும் நேரத்தில் இந்நூல் வந்து சேர்ந்தமையால் அடுத்தாண்டில் 8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு முதலாம் தவணையில் இந்நூலைப் போதிக்குமாறு யாழ். பிரதேச ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. குலசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### மட்டக்களப்பு விமானநிலைய காணி சுவிகரிப்பு

# இன்னும் 169 குடும்பங்கள் வெளியேருத நிலையில்

மட்டக்களப்பு, டிச.16

மட்டக்களப்பு விமான நிலைய சுற்றுடல் காணி சுவிகரிப்பை அடுத்து அப்பகுதியிலிருந்து வெளியேற வேண்டிய குடும்பங்களில் இதுவரை 102 குடும்பங்கள் வெளியேறி விட்டன. மிகுதி 169 குடும்பங்கள் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளன.

இத் தகவலை மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து உதயனுக்குத் தெரிவித்தார்.

வெளியேற்றப்படும் குடும்பங்களுக்கு முதற்கட்டமாசரூபாஇரண்டாயிரம் நஷ்டஈடு வழங்கப் பட்டுள்ளது. நஷ்டஈடு முதற்கட்ட ஒதுக்கீட்டுப் பணத்தில் சுமார் 78,000 ரூபா கொள்ளையடிக்கப் பட்டபோதிலும் அத்தொகை உரியவர்களுக்குக் காசோலைகள் மூலம் வழங்கப்படும்.

இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு மாதகாலப் பங்கீட்டு உணவு வழங்கப்பட்டது.

மேலும் இருமாத காலத்திற்கு உணவு பங்கீடு விநியோகத்தை நீடிக்கப் புனர்வாழ்வுத் துறை அமைச்சின் செயலாளருடன் நேரடித் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

இதேசமயம் மட்டக்களப்பு விமான நிலையச் சுற்றுடல் காணி சுவிகரிப்புக் காரணமாக மூடப்பட வேண்டிய நிலையிலுள்ள புதூர் அ. த. க. பாடசாலை இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து விமானப்படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையை அடுத்தே மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### இசை, நடன பயிற்சி வகுப்பு விரைவில்

யாழ்ப்பாணம், டிச. 16

தமிழ் பட்டதாரிகள் இசை, நடன ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் விரைவில் நடைபெறவுள்ளன.

எங்கு எப்பொழுது பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் என்பது கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாகிஸ்தானில் விரைவில் மக்கள் அரசு

#### கொழும்பில் ஸியா உறுதி

கொழும்பு, டிச. 16

பாகிஸ்தானில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் விரைவில் அமைக்கப்படும்.

பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா - உல் - ஹக் மேற்கண்டவாறு கொழும்பில் சனிக்கிழமை தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பாகிஸ்தான் பிரஜைகள் மத்தியில் ஜனதிபதி பேசினர்.

அப்பொழுது அவர் சொன்னதாவது;

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம், இந்த ஆண்டு இறுதியுடன் நீக்கப்பட்டு விடும்.

பாகிஸ்தானின் அரசியல் முறையில் புதிய மாற்றம் ஏற்பட உள்ளது.

இப்படி ஜனதிபதி சொன்னர்.

### மாணவரின் ஆரம்ப கல்வி ஸ்திரமான நிலையில் கட்டி எழுப்பப்படவேண்டும்

#### பரிசளிப்பு விழாவில் உரை

அச்சுவேலி, டிச 16

"மாணவர்களின் ஆரம்பக் கல்வி எதிர்கால வாழ்க்கைக்கும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் ஏற்புடையதாக மிக ஸ்திரமான நிலையில் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு கூறினர் கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு.ஏ. வி. தங்கராசா.

நீர்வேலி, சி. சி. த. க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திரு. தங்கராசா உரை ஆற்றினர்.

இவர் கூறியதாவது:—

ஆரம்ப பாடசாலைகளின் கல்வித் தரம் மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும்.

பாடசாலைகளின் கல்வித் தரத்தை பாதுகாப்பதற்கு பெற்றோர் முழுமையான ஒத்துழைப்பை அளிக்க வேண்டும். பாடசாலைகளின் தேவைகளை அறிந்து அதனை நிவிர்த்தி செய்வதற்கு அவர்கள் முன்வர வேண்டும்.

கடந்த காலங்களில் சில வைபவங்கள் நகர்புறப் பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் தான் உரித்தானவை என்ற அபிப்பிராயம் மாணவர்மத்தியில் நிலவி வந்தது. ஆனல் இன்று இது மாற்றமடைந்துள்ளது.

எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே கல்வித் திட்டம் தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இப்படி அவர் கூறினர்.

அதிபர் திரு.தி.பூ கதிரவேலு தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பரிசில்களை முன்னுள் அதிபர்கள் வழங்கினர்கள்.

## இறப்பு வீதத்தை குறைக்க ஆரோக்கிய உணவு

### கிளிநொச்சி வைபவத்தில் உரை

கிளிநொச்சி, டிச 16

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நோய்கள், சோம்பல் தன்மை, அசண்டையீனம் போன்றவற்ருல் தான் உலக நாடுகளில் இறப்பு வீதம் அதிகரித்துள்ளது. ஆதலால் மக்கள் ஆரோக்கியமான உணவை உட்கொண்டு ஆயுள்பலத்தை தேட வேண்டும்.

கிளிநொச்சி கச்சேரி திட்டமிடல் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 85ஆம் ஆண்டுக்கான இரண்டாவது நடமாடும் வைத்தியசாலையில் தலைமை வகித்துப் பேசிய திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிளிநொச்சி பாரதிபுரத்தில் நடைபெற்ற இந்த நடமாடும் வைத்தியசாலையில் வளர்ந்தோருக்கான வைத்தியம் பல் வைத்தியம், குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் தடுப்பு மருந்து வழங்குதல் ஆகியன இடம் பெற்றன.

இவ்வைபவத்தில் பல் வைத்தியர் டாக்டர் திருமதி எஸ். சிவபாதசுந்தரம், டாக்டர் சிவலோகநாதன், சுகாதாரப் பரிசோதகர் எம். இராசதுரை, மருத்துவ மாதுக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஸியாவுக்கு கௌரவம்

கொழும்பு, டிச. 16

பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா - உல் - ஹக்கிற்கு கொழும்பு மாநகர சபைசனிக்கிழமைபொது வரவேற்பளித்துக் கௌரவித்தது.

மாநகரசபை மேயர் சிறிசேன கூரே வரவேற்புரை நிகழ்த்தினர்.

### வலி. வடக்கில்

## வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை

### பாதிக்கப்பட்டோர் அதிருப்தி

காங்கேசன்துறை.டிச,16

வலி. வடக்குப் பகுதியில் வெள்ள நிவாரண உதவிகள் எதுவும் வழங்கப்படாமையால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் பெரிதும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் வலி. வடக்குப் பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இராஜரத்தினத்தின் பணிப்பின் பேரில் கிராம சேவையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி வெள்ளம் காரணமாக வலி. வடக்குப் பகுதியில் 1278 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளதுடன் பயிர் அழிவுகள் குறித்த விபரங்களும் தற்போது சேகரிக்கப்படுகின்றன.

## உதய சங்கற்பம்

உனது காலில் ஒரு முள் தைத்தால் "ஓ" என்று அலறி அழும் நீ, மற்றவர்கள் துன்பத்தை உனக்கு வந்த துன்பமாக எண்ணு. அதுவே நீ செய்யும் அறம்.

—இராமகிருஷ்ண பரமஹம்சர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, [illegible] வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
16-12-85 த.பெ. 23

## நீண்டகால முயற்சிக்கு இன்று முதல் நற்பலன்

வடக்கின் மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டம் நிறைவெய்துகிறது. இன்று தொடக்கம் அதன் பலாபலன்களை—வசதிகளை மக்கள் அனுபவிக்க வழி பிறந்துள்ளது.

வடக்கு மாகாணத்தின் பெரும் விளைநிலங்கள் இருக்கும் குடியேற்றத் திட்டங்களையும் பிரதான பகுதியையும் இணைக்கும் மகாதேவா தாம்போதியே இன்று மக்கள் பாவனைக்கு வரும் பெரிய அபிவிருத்தித் திட்டம் ஆகும்.

அது பெரிய அபிவிருத்தித் திட்டமாக இருந்தபோதிலும்காலவரையறையற்ற நீண்டகாலத் திட்டமாகவும் மாறிவிட்டது. சுமார் 48 வருடங்களின் பின்னரே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. தொடுவதும் விடுவதுமாக இருந்து இழுபறிப்பட்ட ஒரு திட்டம் நிறைவேறி பயன் தரத்தொடங்குவது பலமடங்கு மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

மகாதேவா தாம்போதி வெறும் திட்டமாகவே இருந்துவிடுமோ என்று ஒரு காலத்தில் அஞ்சப்பட்டதும் உண்டு. அந்த அச்சத்தை பொய்யாக்குவதற்கு உதவிய சகலரும் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

இறுதிக் கட்டத்தில் அதற்குக் கைகொடுத்த பெருமை, பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தமது தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை தாம்போதி வேலைகளுக்கு கொடுத்தமுன்னாள் எம்.பி.க்களையும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையையும் சாரும்.

தாம்போதி வேலைகள் நிறைவெய்துவதற்கு அரும்பணியாற்றிய பொறியியலாளர் திரு. சு. இராமகிருஷ்ணனின் சேவையையும் இங்கு குறிப்பிடாக வேண்டும். அவர் தமது கடமையைச் சரிவரச் செய்தார் என்று சொல்வதைவிட அதனை ஒரு தொண்டாக நினைத்துத்தன்னையே அர்ப்பணித்தார் என்று சொல்லலாம். தமது சொந்த வீட்டு வேலைபோல் அவர் காட்டிய அக்கறையும் ஆர்வமும் மெச்சத்தக்கவை.

தாம்போதி வேலைகள் முற்றுப் பெறுவதில், சிரமதான வேலைகளில் ஈடுபட்ட தொண்டர் ஸ்தாபனங்களுக்கும் மிகப் பெரிய பங்குண்டு என்பதற்கு யாழ்.செயலகத் திட்ட அலுவலகம் வெளியிட்ட அறிக்கை சான்று பகர்கின்றது.

வடக்கின் விளைநிலங்களான குடியேற்றத் திட்டப் பகுதிகளின் அபிவிருத்திக்கு மகாதேவா தாம்போதி பெரிதும் உதவியாக இருக்கும். 2640 அடி நீளமுள்ள தாம்போதியால் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்துத்தூரம் அரைவாசிக்கும் குறைவாகக் குறுகிவிட்டது. மன்னார், வவுனிக்குளம், தென்னியன்குளம், முறிகண்டிக்குளம், அம்பலப்பெருமாள்குளம், வன்னேரிக்குளம், பூநகரி ஆகிய இடங்களில் உள்ளவர்களின் போக்குவரத்துக் கஷ்டம் இன்றோடு முக்கால் பங்கும் தீர்ந்துவிடுகிறது. போக்குவரத்து சிரமம் நீங்கும்போது 25,000 ஏக்கர் நெல்வயல்களும், 7,500 ஏக்கர் உப உணவு உற்பத்தி நிலமும் 9,000 ஏக்கர் தென்னந்தோட்டமும் அபிவிருத்தியுறும் எனவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தோடு சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் தமது விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதில் நிலவிய குறைகளும் நீங்க வாய்ப்பு உண்டு.

தமிழ்ப் பிரதேசங்கள் எல்லாவற்றிலிருந்தும் எமது மக்கள் அகதிகளாக, அநாதைகளாக அச்சம் கொண்டவர்களாக யாழ்ப்பாணம் நோக்கி வரவேண்டிய ஒரு நிலைமை இப்போது வழக்கமாகிவிட்டது. அவ்வாறான ஒரு காலகட்டத்தில் மகாதேவா தாம்போதி வடக்கின் பல தமிழ்ப்பிரதேசங்களை அருகில் கொண்டு வந்திருக்கிறது.

வெளியில் உள்ளவர்கள் யாழ்ப்பாணம் ஓடி வந்து குடியேறுவதற்கு மகாதேவா தாம்போதி உதவக் கூடாது. அதற்குப் பதில் இங்கிருந்து பலர் குடியேற்றப் பகுதிகளுக்குச் சென்று காடுகளைக் கழனிகளாக்கி வளம் காண அது உதவ வேண்டும். இதுவே எமது விருப்பம். அப்படிச் செய்தால்தான் தாம்போதியை மிகக் கஷ்டப்பட்டு கட்டியதற்கு உரிய பலன் கிடைப்பதாகும்.

தமிழர்கள் அகதிகளாவதும் அநாதைகளாவதும் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. இப்போதில்லாவிடினும் மிக விரைவில் அந்த நிலை மாறி எமக்கு விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கை உதிக்க வேண்டும். வடக்கின் விவசாயப் பிரதேசங்களில் ஆர்வத்துடன் குடியேறி எமது பிரதேச வளத்தைப் பெருக்குவோம்.

# மகாதேவா தாம்போதி

# வடக்கில் ஒரு சாதனை

## இன்று திறப்பு விழா

★ நீண்டநாள் கனவு நனவாகிறது

★ போக்குவரத்து சிரமம் நீங்கும்

★ விவசாயம் செழிப்புற வசதிகள்

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டுப் பகுதியில் இருந்து பூநகரி பகுதிக்கு போவதென்றால் கொழும்புத்துறையில் வள்ளம் எடுத்து பூநகரியில் உள்ள நாகதேவன் துறையில் இறங்கியே போக வேண்டும். இப் பிரயாணம் காலநிலையைப் பொறுத்து மணித்தியாலக் கணக்கில நீடிக்கும்.

காலப்போக்கில் மக்கள் கஷ்டங்களை முன்வைத்து கேரதீவுப் பகுதியிலும் சங்குபிட்டிப் பகுதியிலும் ஏரியினூடே வீதி அமைக்கப்பட்டது. பிரயாணத்தூரத்தின் இடைவெளி கணிசமான அளவில் குறைக்கப்பட்டது.

இதன் முக்கியத்துவத்தைக் குறித்து இலங்கை சட்டசபையில் தமிழர் பிரதிநிதியாக இருந்த காலஞ்சென்ற திரு பாலசிங்கம் அங்கு ஆற்றிய உரைகள் மிகவும் பயனுள்ளவை.

அன்றைய பொது வேலை திணைக்கள பணிப்பாளரும் பொறியியலாளருமாகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு மகாதேவா 1937ம் ஆண்டு இத்தாம்போதி இணைப்பு வேலையில்மிகவும்சிரத்தை கொண்டு செயலாற்றினார். அவரின் நினைவாகவே இது மகாதேவா தாம்போதியென அழைக்கப்படலாயிற்று. தொடர்ந்து சாவகச்சேரியைப் பிரதிநிதிப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் குமாரசாமி அவர்களும் இவ்வேலையில் அக்கறையெடுத்து முயற்சியும் மேற்கொண்டார்.

1937 ஆம் ஆண்டு 13,700அடியாக இருந்த இடைவெளி 1955 ஆம் ஆண்டளவில் 3,300 அடியாகக் குறைக்கப்பட்டது.

ஆனால் அதன் பின் ஒவ்வொரு ஆண்டும் இலங்கை நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் பொழுது பொது வேலை திணைக்கள மதிப்பீட்டில் மகாதேவா தாம்போதிக்கென பத்து ரூபா அடையாள மானியமாக ஒதுக்குவது மட்டுமே வழக்கமாய் இருந்தது.

இந்த நடவடிக்கை மக்கள் மனதில் தாம்போதி வேலை நிறைவு பெறும் என்ற ஒரு நம்பிக்கையை வளர்த்தது. அந்த நம்பிக்கையிலேயே மாதங்களும், வருடங்களும் கழியலாயின

மகாதேவா தாம்போதி நிரப்பப்பட்டு வீதி அமைத்தால் கடல் நீரின் நீரோட்டம் குறைந்து ஆனையிறவில் உள்ள இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி பாதிக்கப்படும் என முதலில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. கடல் நீரின் அளவும் அதன் உவர்த் தன்மையும் குறைந்துவிடும் என்னும் காரணம காட்டப்பட்டது.

ஆனால் 1975 இல் இலங்கை மத்திய பொறியியல் ஆலோசனைச்சபை கம்பியூட்டர் உதவியோடு ஒரு அளவீடு மேற்கொண்டு அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாதென அறிக்கை சமர்ப்பித்தது.

பின்னர் இவ்வழி இணைக்கப்பட்டால் பாதுகாப்பு இல்லை என்ற காரணமும் காட்டப்பட்டது. இத்தடைகள் யாவும் வடபகுதி மக்களுடைய மனதில் பெரும் கவலையைத் தோற்றுவித்தன.

1981 ஆம் ஆண்டு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வமான விஜயம் மேற்கொண்டபோது யாழ்ப்பாண செயலகத்தில் ஒரு பெரிய இணைப்புக் கூட்டம் நடந்தது தமிழர் கூட்டணிச் செயலதிபரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும், வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய திரு யோகேந்திரா துரைசுவாமி அவர்களும் ஏகோபித்த குரலில் மகாதேவா தாம்போதி இணைப்பின் முத்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

பிரதமர் உடனடியாக இவ்வேலையை ஆரம்பிக்கலாம் என இணக்கம் தெரிவித்தார் அத்துடன் தாம்போதியையும் சென்று பார்வையிட்டு தமது உத்தரவையும் வழங்கினார். இவை பொதுமக்கள், அதிகாரிகள் மத்தியில் ஒரு பெரும் உற்சாகத்தைத் தோற்றுவித்தது.

நிதி நிலைமையைச் சமாளிக்க வடபகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் முழுமனதோடு, தத்தமக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து 100 இலட்சம் ரூபாவை ஒதுக்கினார்கள். பிரதேச அபிவிருத்தி அமைச்சு தன் பொது நிதியிலிருந்து 15 இலட்சம் ரூபாவை ஒதுக்கி உதவியது.

### குறுகிய பயணத் தூரம்

மகாதேவா தாம்போதி பாவிப்புக்கு திறந்து விடப்படுவதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் விவசாயக் கிராமங்களுக்கும் இடையேயான தூரம் கணிசமான அளவு குறைகின்றது.

இதுகாலவரை இருந்த தூரமும் புதிய தூரமும் வருமாறு;

யாழ்பபாணத்திலிருந்து மன்னார் - (ஆனையிறவு வவுனியா மூலம்) 142மைல்—70மைல்

யாழ்ப்பாணதிலிருந்து வவுனிக்குளம் 72மைல் — 52 மைல்

யாழ்ப்பாணத்திலிருந்து தென்னியன்குளம் 80மைல் — 45 மைல்

யாழ்ப்பாணத்திலிருந்து முறிகண்டிக்குளம் 61 மைல் — 47 மைல்

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பலப்பெருமாள் குளம் 62 மைல் — 44 மைல்

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னேரிக்குளம் 64 மைல் — 33 மைல்

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கராயன்குளம் 59 மைல் — 40 மைல்

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி 55 மைல் — 21 மைல்

இவை யாவும் குடியேற்றத் திட்டங்கள் அமைந்த விவசாயக் கிராமங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



மகாதேவா தாம்போதி இதுதான்

3,300 அடி இடைவெளியில் 660 அடி நீளமுள்ள ஒரு பாலமும் மிகுதியில் 400 திறந்த வாசல்களால் கடல் நீர் தடையின்றி ஓடும் வசதியுள்ள தாம்போதியும் அமைக்க வேண்டியதாயிற்று.

கேரதீவுத்துறையின் பக்கமாக ஆழம் சராசரி 11 அடி ஆகையால் பாலம் அப்பக்கமாகவே அமைக்கப்படவுள்ளது. சங்குப்பிட்டிப் பக்கமாக, கடல் 4 அடி தொடக்கம் 6 அடி வரை ஆழமாக உள்ளது. இப்பகுதியில் தாம்போதி அமைப்பு வேலை நடைபெற்று முடிவடைந்துள்ளது.

இந்த நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய பாரிய மற்றும் சிறிய அளவிலான கற்களைப் பெறும் பொருட்டு இரு கல் உடைக்கும் குதங்கள், முழங்காவிலிலும், வேம்பிராயிலும் நெடுஞ்சாலை திணைக்களப் பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் தேவையான கற்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் பெறப்பட்டது. 2400 தொகை கொண்ட மூன்று அடி விட்ட 8 அடி நீள கொங்கிறீட் பைப்புகள் கொழும்பு, அனுராதபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன.

மனித சக்தியின் மகிமையை உணர்ந்து தொழிலாளர்களின் முயற்சியினாலேயே பாரிய இயந்திரங்கள்இன்றி தாம்போதி நிர்மாணவேலைகள் நடைபெற்றன.

இத்தாம்போதி வேலை 1981 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது நிறைவேற்றுப் பொறியியலாளராக திரு. சு. இராமகிருஷ்ணன் இவ்வேலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். மக்களின் சக்தியையும் அபிலாசைகளையும் துணையாகக் கொண்டு இப் பாரிய திட்டத்தை துரிதமாக நிறைவேற்றவும் சிரமதானப் பணிகள் மூலம் பொதுமக்களையும் பங்கு கொள்ள வைக்கவும் அவர் விரும்பினார்.

இதற்காக பூநகரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

சிரமதானப் பணிகளுக்கு என ஒரு குழு அமைக்கப்பட்டு பொறியியலாளர் திரு.சு.இராமகிருஷ்ணன் தலைவராகவும் பெரும் தெருக்கள் திணைக்களத்தைச்சேர்ந்த திரு. சதா. இராமகிருஷ்ணன் செயலாளராகவும் பணிபுரிந்தனர். இவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பை முன்னாள் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கமும்நெடுஞ்சாலை திணைக்

(4ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

**குறள்:**

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு.

**பொருள்:**

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமற் போகும்.

# வவுனியா, திருகோணமலை தமிழரை யாழ்ப்பாணத்துக்குள் துரத்த முயற்சி

## 'புரொண்ட் லைன்' சிறப்பு செய்தியாளர் எழுதுகிறார்

(நேற்றைய தொடர்ச்சி)

உதாரணத்திற்கு, திருகோணமலை மாவட்டத்தில் முதலிக்குளம் என்னும் இடத்தில் போராளிகள்சிங்களக் குடியேற்றம் ஒன்றைத் தாக்கினார்கள்.

இதில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பதைக் கண்டு கொள்ள முடியாதுள்ளது. சிங்கள வட்டாரங்களின்படி 10க்கும் 30க்கும் இடையில் இந்த எண்ணிக்கை இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குச் செல்ல வெளிநாட்டுச் செய்தியாளருக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளபடியால், இவைபற்றிய சரியான புள்ளி விவரங்களைச் சேகரிக்க சுயேச்சையான நிறுவனம் ஒன்றும் இல்லை.

கூட்டணிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கத்தின்கூற்றுப்படி, தொடர்ச்சியான வன்செயல்கள் இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்டவேலை என்று கூறப்படுகின்றது.

''வவுனியாவில் தலைமைப் பதவியை ஏற்று யார் பணி செய்கின்றாரோ அவர் தாக்கப்படுகின்றார். நிலைமையை மோசமாக்குவதே அரசாங்கத்தின் எண்ணம். தொண்டர் ஸ்தாபனங்கள்வவுனியாவில் இருந்து வெளியேற வேண்டும் என்பதே அரசின் எண்ணம்''—இப்படி திரு. அ. அமிர்தலிங்கம் சொன்னார்.

பொருளாதாரத் தாக்கம் இருந்தாலும், சூழ்நிலை மேலும் மோசமடைவது அரசாங்கத்திற்கு முக்கியமாகத் தேவைப்படுவது போல் தெரிகின்றது.

உல்லாசப் பிரயாணத்துறை மட்டும் அல்ல, வடக்கு-கிழக்குப் பகுதிகளின் விவசாய நடவடிக்கைகளுமே முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து விட்டன.

### அரிசி இறக்குமதி

கடந்த ஆண்டு இலங்கை 50,000 தொன் அரிசியை இறக்குமதி செய்தது.

இந்த ஆண்டு 2 லட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளது.

தற்போது இடம்பெறும் மாரிப்போக வேளாண்மைக்கான திட்டமிட்ட உற்பத்தி இலக்கில் 18 இலட்சம் தொன் துண்டு விழப் போகின்றது.

செழித்துக் காணப்பட்ட யாழ். குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சி,துப்புரவாக இல்லாது போய்விட்டது. யாழ்ப்பாணத்துடனான கொழும்பு வர்த்தகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தற்போது நிலவும் அபாயகரமான சூழ்நிலை பற்றி 'புரெண்ட் லைன்' சஞ்சிகையில் அதன் சிறப்புச் செய்தியாளர் எழுதியிருந்த கட்டுரையின் தமிழாக்கம் இது.

தமிழ்ப் பகுதிகளில் இரண்டு வாரகாலச் சுற்றுப் பிரயாணம் ஒன்றைமேற்கொண்ட பின்னரே இக்கட்டுரையை சிறப்புச் செய்தியாளர் எழுதினார்.

இதே நேரத்தில் ஆயுத பலத்தைப் பல மடங்காகப் பெருக்குவதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. 83 அரை கோடிக்கு ஆயுதங்களை வாங்கும் பிரேரணை ஒன்றை இலங்கை நாடாளுமன்றம் அண்மையில் அங்கீகரித்துள்ளது.

நீண்டகாலத்தில் பொருளாதார, வர்த்தக ரீதியிலான நிர்ப்பந்தங்கள் ஏதாவது வழியில் நியாயமான தீர்வு ஒன்றுக்கு இறுதியில்இலங்கை அரசை வரச் செய்யும் என்ற நம்பிக்கை சிறிது உள்ளது.

ஆனால் குறுகிய காலத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன போராளிகளுக்கு எதிராக பெரிய இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயாராகுவதாகத் தெரிகிறது.

சமாதான நடவடிக்கைகள் முறிவடைந்தால் இந்த நடவடிக்கையை அவர் எடுக்கலாம்.

### திருமலை யுத்தம்

செப்டம்பரில் ஐ.தே.க. தேசியக் குழுவில் பேசுகையில்,

'திருமலை மாவட்டத்தில் யுத்தம் நடக்கின்றது.'—என்று சொன்னார்.

சில ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்தும் பத்திரிகைச் சுதந்திரத்துக்குக்கட்டுப்பாடு விதிக்கும்—என்றும் ஜனாதிபதி சொன்னார்.

கடந்த 8 ஆண்டுகளாக வெளியாகும் இப்படியான கூற்றுக்கள் முடிவில்லா இராஜதந்திர நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இந்த அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாது என்ற திடசித்தத்தைத் தமிழர் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது.

இரண்டு வாரச் சுற்றுப் பிரயாணத்தில் என் மனதில் ஊன்றிப் பதிந்த ஒரு கருத்து, சுதந்திரத்துக்கு கொஞ்சம் குறைந்து இருந்தாலும் ஏதாவது ஓர் தீர்வு வரவேண்டும் என்றே சாதாரண தமிழனும் விரும்புகின்றான்.

தமிழரின் ஒருமைப்பாட்டுக் குரலாகவே கடந்த சில ஆண்டுகளாக ஈழம் கோரிக்கை இருந்தது.

ஈழம்'பெறப் போராடும் பையன்கள்' தமிழர்களின் பாதுகாவலர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

அவர்களின் தலைமை அத்தியாவசியமானது.

ஏதாவது ஒரு வழியான அதிகாரப் பரவலாக்கல் நிறைந்த அரசியல் தீர்வு ஒன்றுக்கு போராளிகள் சம்மதம் தெரிவித்து பூரணமாக ஏற்றுக் கொண்டால் தமிழ் மக்களும் அதைப் பூரணமாக ஏற்பர் என்பது என் நம்பிக்கை.

நிரந்தர சமாதானத்துக்கு வித்திடும் எந்தத் தீர்வும் தமிழ்மக்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட ஈழமே.

(முற்றும்)

அவுஸ்திரேலியா ஒறேஞ்
(RIVER BRAND)
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்டு
விற்பனையாகின்றது.
ஹோட்டல் றுெலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
TPhone: 22070 மொத்த-சில்லறை விற்பனைக்குண்டு.

# உதயன்

16 - 12 - 1985

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட அப்பிள்
விற்பனைக்குண்டு.
அவுஸ்திரேலியா அப்பிள்
(POPPY BRAND)
விபரங்களுக்கு:
ஹோட்டல் றுெலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
T'Phone: 22070 சில்லறை-மொத்த விற்பனை உண்டு

## வித்தாரம்

என்ன முரளி, முழிச்சுக்கொண்டு நிக்கிருய். காலங்காத்தாலே எழும்பியதும், கலண்டர் ஒற்றையைக் கிழிச்சுக் கொண்டு முழிக்கிருய்?

அட அதுக்குத் தானே! ஏதோ என்னவோ எண்டு முழிசிருய் எண்டல்லோ நான் நினைச்சன். ஆறுமுக நாவலற்றை பிறந்த தினம் நாளைக்கு செவ்வாய்க்கிழமை தான் எண்டு என்னைச் சந்திச்ச ஓர் அன்பர் சொன்னுர். அவர் போன பிறகு நானும் கலண்டரைப் பார்த்தேன் புதன்கிழமை எண்டு போட்டிருக்கு.

என்னைச்சந்திச்ச அந்த அன்பர் நல்ல தமிழறிவும் சமய அறிவும் உள்ளவர். ஆனாலே அவர் சொன்னதை நம்பிவிட்டேன். நாவலர் "கார்த்திகை மாசத்து அவிட்ட நட்சத்திரத்திலே தான் அவதரித்தார்" எண்டு அவர் அழெகுத்தமிழ் பேசினுர்.

அந்த அவிட்ட நட்சத்திரத்திலே நாவலர் ஆசிரமத்துக்குள்ளை தான் போய் இருக்கப்போவதாகவும், தானே நவயுக நாவலர் என்றும் அவர் விளாசித் தள்ளினுர்.

அவர் போட்டிருந்த காவி உடையையும், திருநீறு சந்தனப் பூச்சையும் பார்த்ததும் அவரும் ஒரு நாவலராய் மாறுவாரோ எண்டு நினைத்து எதனையும் சொல்லாமல் "கப்சிப்" என்று இருந்து விட்டேன். அவர் எழும்பிப் போய்விட்டார்.

நான் சொல்ல வந்த விஷயம் அது இல்லை இப்ப கொஞ்சக் காலமா இந்த நாள் நட்சத்திரம் எல்லாம் கலண்டருக்குக் கலண்டர் பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம் மாறுது.

நாள் நட்சத்திரம் ஒண்டா இருக்குதோ? அல்லது வேறுவேறுவிதம் விதமாய் இருக்குதோ? இல்லாட்டால் பஞ்சாங்கங்கள், கணிப்புகள் வித்தியாசப்படுகுதோ? இப்பிடிப் பல கேள்வியள் வந்து தலையை மோதித் தள்ளுது.

எண்டாலும் சில சனம் கடைக்குச் சாமான் வாங்கப் போறத்துக்கு முன்னுக்கும் பஞ்சாங்கம் பார்த்தெல்லே போகுதுகள். அது அது அவனவன் நம்பிக்கை. நாங்கள் ஏன் அதுகளிலை தலையிடவேணும்.

எங்கடை ஆக்களுக்கு மட்டும் தான் உதுகளிலை நம்பிக்கை எண்டு நினையாதையுங்கோ.

உந்த வெளிநாட்டுக்காரன்கள் எல்லாம் அதுவும் வெள்ளைக்காரன்கள் தான் நட்சத்திரத்திலை நல்ல நம்பிக்கை வைக்கிறுங்கள் இந்தக் காலத்திலை.

அஸ்ரோலஜி நியுமரோலொஜி எண்டு அலையாய் அலையுறுங்கள்.

அதுமட்டுமில்லை அதுகளை நல்லா ஆராய்ச்சி செய்தும் பார்க்கிறுங்களப்பா. கீழைநாட்டுச் சாத்திரம் எல்லாம் இப்ப மேலை நாடுகளிலை தான் பொன்னுக்குள்ளை போட்டு எடுத்த குடம் மாதிரி மின்னுதுகள்.

நேற்றைக்கு பேப்பரிலை பார்த்தனியே. 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வந்தால் அண்டைக்கு விபத்துக்கள் அதிகமாக இருக்கும் எண்டு கண்டு பிடிச்சிருக்கிறுங்கள்.

மேற்கு ஜேர்மனி மோட்டார் சங்கம் சேகரித்த புள்ளி விபரத்திலை இருந்து இந்த விஷயம் தெரிய வந்திருக்கு.

இந்த மாசம் 13 ஆம் திகதி ஒரு வெள்ளிக்கிழமை: அண்டைக்கு எனக்குத் தெரிஞ்ச மூண்டு பேர் தங்களுக்கு நாய் கடிச்சதாகச் சொல்லிச்சினம்.

நாய் கடிக்கிறதும் ஒரு வித விபத்துத்தானே.

உப்பிடிப் பாக்கைமிக்கை எதை நம்புகிறது எதை நம்பாமல் விடுறது எண்டு தெரியேல்லை அப்பா!

—கொண்டோடி

மதவாச்சி சம்பவம்:

# 6 பொலிஸார் கைது: 33 பேர் இடமாற்றம்

கொழும்பு, டிச. 16

மதவாச்சியில் சில தினங்களுக்கு முன்னர் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக 6 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 33 பொலீஸார் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இடமாற்றம் செய்யப்பட்ட பொலீஸார் நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து மதவாச்சிக்குப் புதிதாக பொலீஸார் இடமாற்றம் பெற்று வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு ரயில் பிரயாணிகளைப் பாதுகாப்பாகக்கொண்டு போய்விடுவதற்கு வழங்கப்படும் 'பாதுகாப்பு'ப் பணத்தைப் பகிர்வதில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்தே பொலீஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார்.

### கைதான 52பேரில் 32 பேர் விடுதலை

திருகோணமலை, டிச. 16

திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட 52 தமிழர்களில் 32 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மிகுதியான 20 பேரும் ஆயுதப்படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### சங்கானையில் மருந்துதட்டுப்பாடு ஓரளவு தீர்ந்தது

வட்டுக்கோட்டை டிச16

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நீண்ட காலமாக நிலவி வந்த மருந்து பற்றாக்குறை தற்போது ஓரளவு குறைந்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எம். ஏ. இராசரத்தினம்வடபிராந்தியமருந்துக் களஞ்சியத்திற்குச் சென்று அங்கிருந்து மருந்து வகைகளைத் தருவித்துள்ளார்.

ரூபவாஹினி

16 - 12 - 1985

மாலை
5 மணி - செய்திகள்
5-05 - ஹீ மான்
5-30 - வாட்டர்வில் காங்க்
6-00 - 'ரங்கன'
6-30 - செய்திகள் (தமிழ்)
6-55 - லியா-உல்-ஹக் நிகழ்ச்சி
7-25 - வாழும் கிரகம்
8-00 - செய்திகள் (சிங்களம்)
8-20 - வாழும் கிரகம் (தொடர்ச்சி)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 - வெப்ஸ்டர்- நகைச்சுவை
9-50 - விஞ்ஞானக் கற்பனை
10-40 - ஒளிபரப்பு முடிவு

### வடஇலங்கை மருத்துவக் கல்லூரி பற்றிய கருத்தரங்கு

நல்லூர், டிச. 16

வட இலங்கை மருத்துவக் கல்லூரி சம்பந்தமான வாதப் பிரதிவாத கருத்தரங்குஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெற்றது.

கருத்தரங்கில் ஆதரவாகவும், எதிராகவும் வாதங்கள் எழுப்பப்பட்டன.

கருத்தரங்கு பூரண முடிவு எதுவும் தொவிக்காமல் முடிவுற்றது.

### மோட்டார் லைசென்ஸ் நீடிப்பு

கொழும்பு, டிச 16

மோட்டார் வாகனங்களுக்கு 1986ஆம் ஆண்டுக்கான லைசென்ஸ் எடுக்கும் திகதி பெப்ரவரி 28 வரை நீடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போக்குவரத்து அமைச்சு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

திகதி நீடிப்பு மாத முடிவில் அறிவிக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

மேலதிகக் கட்டணம் இன்றி பெப்ரவரி 28 வரை லைசென்ஸ் பெற முடியும்.

# இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழருடன் சேர்ந்து தனிநாடு அமைக்க முயற்சி

### ராஜீவுக்கு பௌத்த அமைப்பு தலைவர் கடிதம்

கொழும்பு, டிச. 16

இந்தியத் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழருடன் சேர்ந்து தனித் தமிழ் ராஜ்யம் ஒன்றை அமைக்க முயற்சிக்கின்றுர்கள்.

இந்த முயற்சியை முளையிலே கிள்ளி விடுங்கள்.

அகில இலங்கை பௌத்த ஸ்தாபன அமைப்பின் தலைவர் திரு. எட்மண்ட் பனுகொட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

ஈழப் போராளிகள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை வென்றுல் தென் இந்தியத் தமிழ் நாட்டு மக்களுடன் சேர்ந்து தமிழ் அரசு ஒன்றை நிறுவிவிடுவார்கள்.

இனப் பிரச்சினை என்ற போர்வையில் மார்க்ஸிய போராளிகள் வடக்கு, கிழக்கில் உள்ள அப்பாவிகளைக் கொல்கிறர்கள்.

எமது தாய் நாடு பிரிக்கப்படுவதை பெரும்பாலான மக்கள் எதிர்க்கின்றுர்கள்.

இலங்கை அரசாங்கம் சம்பந்தமாக இந்தியா காட்டும் ஒத்துழைப்பு, நட்பு குறித்து பெரும்பான்மையினர் ஆறுதல் அடைகின்றனர்.

போராளிகள் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர் அவர்களுக்கு நவீன ஆயுதங்களும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டுத் தமிழரும் இலங்கைத் தமிழரும் சேர்ந்து தனித்தமிழ் அரசு அமைக்கச் சதி செய்கின்றுர்கள்.

இதற்கு நீங்கள் இடமளிக்க வேண்டாம்'' இப்படி திரு பனுகொட இந்தியப் பிரதமரைக் கேட்டுள்ளார்.

### ஓடியவரை நோக்கி துப்பாக்கி சூடு

மட்டக்களப்பு, டிச 16

மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் ஆயுதப் படையினரைக் கண்டு ஓடிய ஒரு நபர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

இதில் எவரும் காயம் அடையவில்லை. இச் சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் பதற்றம் நிலவியது. கடைகள் மூடப்பட்டன. படையினர் பின்னர் தேடுதல் நடத்தினர். சிலரை விசாரணை செய்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

### கலப்பொருள் ஒப்பந்தம்

ஜெனிவா, டிச. 16

அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒரு முக்கிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளன இதன்படி கலபொருள்களை வாங்க இரண்டு நாடுகளும் சம்மதித்துள்ளன.

ஜெனீவா உச்சிமாநாட்டுக்குப் பின்னர் இரண்டு நாடுகளும் செய்துகொண்ட முக்கிய உடன்படிக்கை இது ஆகும்.

## மகாதேவா தாம்போதி வடக்கில் ஒரு....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களத்தைச் சேர்ந்த திரு. வி. நாகேஸ்வரனும் நல்கினர்.

**பலாபலன்கள்**

மகாதேவா தாம்போதி வேலைகளைப் பூரணப்படுத்துவதால் பல நன்மைகள் வந்து சேரும் என மக்கள் நெடுங்காலமாக எதிர்பார்த்தனர். இவ் வதிர்பார்ப்புக்கள் ஓரளவு நிறைவு பெறும் காலம் இப்பொழுது வந்து விட்டது மகாதேவா தாம்போதியும் பாலமும் பூரணப்படுத்தப்பட்டதும் பின்வரும் பயன்களை மக்கள் அடைவார்கள்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து பிற இடங்களுக்குச் செல்லும் தூரமும் நேரமும் கணிசமான அளவு குறைக்கப்படும்.

2. போக்குவரத்து சீராக அமையும் போது பெருமளவு விவசாய நிலங்களின் அபிவிருத்தியமையும் பெரு வாய்ப்பு உண்டு.

25,000 ஏக்கர் நெல் வயல்கள்.

7,500 ஏக்கர் உப உணவு உற்பத்தி நிலங்கள்.

9,000 ஏக்கர் தென்னந் தோட்டங்கள்.

ஒரு பின்தங்கிய பகுதியான பூநகரியில், முழங்காவிலில் வளர்ந்துவரும் குடியேற்றக் கிராமமாகும். இங்கு குழாய்க் கிணறு அமைத்து அந்நகரின் மூலம் உபஉணவுப் பொருள்கள் மிகப் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு மிக வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைத்து வருகின்றன.

இங்குள்ள உற்பத்திப் பொருள்கள் நூற்றுக்குத் 90 சதவீதம் யாழ் நகரச் சந்தையையே நாடி வருகின்றன.

கவுதாரிமுனை,வெட்டுக்காடு, கிராஞ்சி ஆகிய இடங்களில் பெருமளவு தென்னைச் செய்கை உண்டு.

இங்குள்ள உற்பத்திப் பொருள்களும், தேங்காய், கிடுகு, மட்டை போன்ற தெங்குப் பொருள்களும் இன்று வரை சங்குப்பிட்டியில் இருந்து பெரு வள்ளங்களில் கொழும்புத்துறை ஊடாக யாழ்ப்பாணத்தை அடைகின்றன. பாதை சீராகுமேயானால் சிரமம்தானகவே நீங்கும்.

மேலும் யாழ். குடாநாட்டில் இப்பொழுது மூலைமுடுக்கெல்லாம் கல்வீடுகளாக உருவெடுக்கின்றன. வீடு கட்டப் பயன்படுத்தப்படும் வெள்ளை மணல் தற்சமயம் குடாநாட்டுப் பகுதியில் எடுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கவுதாரிமுனையில் மணலித் தலைவரை ஒரே சீராக நாககண்டு வியக்கத்தக்க அளவு மண் மலைகளாகப் பரந்து காணப்படுகின்றன.

மகாதேவா தாம்போதியும் பாலமும் பூரணப் படுத்தப்பட்டதும் இம் மண்ணை பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல வாய்ப்புண்டு. அத்துடன் காணிச் சொந்தக்காரர்களும் நல்ல வருமானத்தைத் தேடிக் கொள்வார்கள்.

யாழ். குடாநாட்டில் நாளுக்கு நாள் மக்கள் தொகை கூடி இடப்பிரச்சினை அதிகமாகிறது மக்களை பூநகரி,முழங்காவில், கிராஞ்சி மற்றும் பகுதிகளுக்கு குடாநாட்டை விட்டு வெளியேறி இப்பகுதிகளில் குடியேறும்படி தீர்ப்பந்திக்க இயலாதிருந்தது. காணிப்பங்கீடு செய்தாலும் போக்குவரத்துச் சிரமங்களை எண்ணி அவற்றைக் கைவிட்டு விடுகின்றனர். ஆனுல் நேர் சீரான போக்குவரத்துப்பாதை அமைந்ததும் பரந்த குடியேற்றத்திட்டங்களில் மக்களின் அக்கறையும் ஆர்வமும் உண்டாகும்.

முதற்கட்டமான மகாதேவா தாம்போதி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதால் இப்பாதையைப் பூரணப்படுத்த இரண்டாம் கட்டமான 660 அடி நீளப் பாலத்தைக் கட்டிமுடிக்க வேண்டும். இவ் வேலைக்கென மூன்றரைக்கோடி ரூபா தேவைப்படலாம்.

1983 ஆம் ஆண்டு நெடுஞ்சாலை அமைச்சு இப் பாரிய வேலைக்கென முதற்கட்டமாக 30 இலட்சம் ரூபா ஒதுக்கிபிருந்தது. இப்பணம் தற்பொழுது வைப்புப் பணமாக உள்ளது இப்பணத்தைக் கொண்டு பாலவேலைகளை உடன் ஆரம்பிக்கலாம்.

இவ்வேலை மத்திய அரசாங்கத்தின் நிதியுடன், மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள நிர்மாண கூட்டுத்தாபனத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு திட்டமாகும்.

நிர்மாண வேலைகளுக்கும் குழுவின் முயற்சிகளுக்கும்பக்கபலமாகவும் துணையாகவும் காலஞ்சென்ற நெடுஞ்சாலை திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு. எஸ். கணேசரெட்ணம், யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு சு. சிவதாசன், பிரதம. பொறியியலாளர்களான திரு. சு. பாலேந்திரா, திரு. எஸ். எம். வி இசநாயகம் ஆகியோர் இருந்தனர்.

சிரமதானப் பணிகளுக்கு பூநகரிப் பகுதி உழவு இயந்திரங்களைத் தந்து உதவியும் மற்றும் பொதுமக்கள் பங்கு பற்றியும் ஆரம்பித்து வைத்தனர். இதைத் தொடர்ந்து சனி,ஞாயிறு நாட்களில் நடைபெறும் சிரமதானப்பணி 70நாட்களுக்கு நடைபெற்றது பொதுமக்கள் ஆதரவு வழங்கியும், பணியில் வெற்றியும் கண்டு தாம் நடைமுறைப்படுத்தி சிரமதானம் என்ற சொல்லுக்கு புது மெருகூட்டினர். எல்லோருடைய விடா முயற்சியாலும், ஒத்துழைப்பாலும் மகாதேவா தாம்போதி வேலை சிறப்பாக நடைபெற்றன.

மகாதேவாதாம்போதி வேலைகள் சிறப்பாகவும் துரிதமாகவும் நடைபெற விரும்பிய பொதுமக்களும் தாபனங்களும் சிரமதானப்பணியில ஈடுபட்டமையால் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான அருபபணியாற்றப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஒரு பாரிய திட்டமாக விளங்கிய மகாதேவா தாம்போதி பல இன்னல்களுக்கும் இடைஞ்சல்களுக்கும் மத்தியில் முடிவுஞள் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. க. நடராசா, சபை அங்கத்தவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள், பொதுதாபனங்கள்ஆகியவற்றின் ஒத்துழைப்பினுல் தாம்போதி வேலைகள் நிறைவு பெறுவதை யிட்டு யாவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

## விளையாட்டரங்கு

ஆஸி — இந்தியா முதல் டெஸ்ட்

# வெற்றி தோல்வியின்றி முடிவடையும் நிலை!

### மூன்று மணி நேர ஆட்டம் குழம்பியது

அடிலயிட், டிச. 16

ஆஸ்திரேலிய — இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றிமுடிவடையும் நிலை தோன்றியிருக்கிறது.

இதுவரை மூன்று நாள் ஆட்டம் முடிவடைந்துவிட்டது. ஆகமொத்தம் 13 விக்கெட் டுக்கட்டுக்கள் மட்டுமே வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

இன்னும் இரண்டு நாள் ஆட்டமே மிச்சம். இத்தக் கால எல்லைக்குள் ஆட்டம் முற்றாக முடிவடைவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. ஆகையினுல் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று மூன்றும் நாள் மூன்று மணி நேர ஆட்டம் விளையாடப்படாமல் குழம்பியது. மழையும், வெளிச்சமின்மையுமே இதற்குக் காரணம்.

இந்த ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 381 ஓட்டங்களைப்பெற்றது என்பதும்—

நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தது என்பதும் தெரிந்ததே.

நேற்று இந்தியா தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. மழை காரணமாக நேற்றைய ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது இந்தியா மூன்று விக்கட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று சுனில் கவாஸ்கர் ஆட்டக் களத்துக்கு வரவில்லை. நேற்று முன்தின ஆட்டத்தில் சுகவீனமடைந்த அவர் துடுப்பாட்டத்தைத் தள்ளிப் போட்டார்.

நேற்றைய ஆட்டத்தில் சேட்டன் சர்மா 54 ஓட்டங்களைப் பெற்றுர்.

இன்று நான்காம் நாள் ஆட்டம் தொடர்ந்து நடைபெறும்.

# நாவாந்துறை சென். மேரிஸ்

### நீல அணி சாம்பியன்

—விளையாட்டுச்செய்தியாளர் சன். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்திய ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டத்தின் 'பி' பிரிவு சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக நீல அணி சாம்பியனுகியது.

நேற்று நடைபெற்ற கடைசிப் போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக நீல அணியும் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக வெள்ளை அணியும் மோதிக்கொண்டன.

நேற்றைய ஆட்டம் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி நேர ஒழுங்கின்படி இந்த ஆட்டம் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நேற்றைய ஆட்டமொன்றில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணியுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக (பி) அணி மோதவிருந்த போதிலும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக (பி) அணி சமுகமளிக்காததால் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிகள் இரண்டும் மோதிக் கொண்டதனுல் ஆட்டம் சோபிக்கவில்லை. இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து கண்காட்சி ஆட்டம் போல ஆடினர்.

இறுதியில் இந்த ஆட்டம் 2-க்கு 2 என்ற கோல் அடிப்படையில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சென். மேரிஸ் விளையாட்டுக் கழக (வெள்ளை) அணி 2-ம் இடத்தை பெற்றுக்கொண்டது.

குவைத்
பணிப் பெண்களை
அழைக்கின்றது!
குவைத்துக்குப் பணிப்பெண்கள்
தேவைப்படுகின்றனர்!
காலதாமதம் செய்யாது உடன்
தொடர்புகொள்ளுங்கள்,
லிப்ருஸ் லிமிட்.,
R. G.கட்டடம், 72,ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
60, Sea Beach Road, PETTAH, T'Phone: 29148
* மேற்கு ஜெர்மனி * பிரான்ஸ் * இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி இம்மாதம்
23ஆந் திகதி உங்களைப் பாதுகாப்பாக
அழைத்துச் செல்வார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம் அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 16-12-1985